தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-3-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரிகோ சிறப்புக் கல்வி விருது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், 2016-ஆம் ஆண்டிற்கான 'ரிகோ சிறப்புக் கல்வி விருதினை' வென்றுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ''சிறந்த தகவல் தொழில் நுட்பத்தினைப்'' பயன்படுத்தியதற்காக வணிக உலகத்தினரால் இந்த விருது வழங்கப்பட்டது. புதுதில்லியில் 19-2-2016 அன்று நடந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தேர்வாணையக் கட்டுப்பாட்டாளர் முனைவர் கி.இளமுருகு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விடைத்தாள்களற்ற தேர்வு முறை 2013-ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. இம்முறை முதன்முதலாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தான் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது புதுமையான முறை மட்டுமின்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் உகந்தது. இம்முறையில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் திருத்தப்பட்ட விடைத்தாள்களை சரி பார்க்கலாம். எனவே, இத்தேர்வு முறை மாணவர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றது. ரிகோ 2016 சிறப்புக் கல்வி விருது (நிறுவனப் பிரிவில்) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருப்பது வேளாண்மைப் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தேர்வாணையக் கட்டுப்பாட்டாளர் முனைவர் கி.இளமுருகு அவர்கள் தெரிவித்தார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்